# பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2023-2024 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.205/கனிமம்/2017, நாள் 23.09.2017-ன்படி பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண் IV49/2017, நாள் 27.9.2017-ன்படி பெரம்பலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் | 1 | மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், பெரம்பலூர் | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், பெரம்பலூர் |
| 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பெரம்பலூர் | 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பெரம்பலூர் |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் |
| 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சிகள்), வளர்ச்சி, பெரம்பலூர். | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சிகள்), வளர்ச்சி, பெரம்பலூர். |
| 6 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், பெரம்பலூர் | 6 | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சி துறை, பெரம்பலூர் |
| 7 | முதன்மைக் கல்வி அலுவலர், பெரம்பலூர். | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், பெரம்பலூர் |
| 8 | மாவட்டக் கருவூல அலுவலர், பெரம்பலூர் | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம், அரியலூர் |
| 9 | மாவட்ட சமூக நல அலுவலர், பெரம்லூர் | 9 | மாவட்ட வன அலுவலர், பெரம்பலூர் |
| 10 | உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), பெரம்பலூர் | 10 | முதன்மை பொறியாளர், நீர் ஆதார அமைப்பு, பொ.ப.துறை, திருச்சி |
| 11 | முனைவர்.அன்பழகன், 42, 3வது குறுக்கு தெரு, செல்வா நகர், நான்கு ரோடு, துறைமங்கலம் அஞ்சல், பெரம்பலூர். | 11 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, பெரம்பலூர் |
| 12 | வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர். | 12 | மாவட்ட கருவூல அலுவலர், பெரம்பலூர். |
| | | 13 | மாவட்ட சமூக நல அலுவலர்,பெரம்பலூர். |

| | | | |
|---|---|---|---|
| | | 14 | துணை இயக்குநர்,(பொது - சுகாதார மைய பொறுப்பாளர்) சுகாதார பணிகள், பெரம்பலூர் |
| | | 15 | முதன்மை கல்வி அலுவலர், பெரம்பலூர் |
| | | 16 | இணை இயக்குநர், அரசு சுகாதார துறை, பெரம்பலூர் |

பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பெரம்பலூர் இந்தியன் வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.6569346347) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

2023-2024-ம் ஆண்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் 31 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 73 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் உள்ளன. சிறுகனிம குத்தகையில் 11 கிரானைட், தீக்களிமண் 12, ஜிப்சம் 4 குவாரிகள் மற்றும் 46 சாதாரண கல் குவாரிகளும் உள்ளன. 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டவற்றிற்கும் உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. 12.01.2015-க்கு பிறகு உரிமம் வழங்கப்பட்டவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 39 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

| வ. எண் | கிராமம் | கிராமப் பஞ்சாயத்து | பிளாக் பஞ்சாயத்து |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | கீழக்கரை | பெரம்பலூர் |
| 2 | எசனை | எசனை | |
| 3 | புதுநடுவலூர் | புதுநடுவலூர் | |
| 4 | கல்பாடி(வடக்கு (ம) தெற்கு) | கல்பாடி | |
| 5 | ஆலம்பாடி | ஆலம்பாடி | |
| 6 | செங்குணம் | செங்குணம் | |
| 7 | பெரம்பலூர்(வ) | பெரம்பலூர் | |
| 8 | கோனேரிப்பாளையம் | கோனேரிப்பாளையம் | |
| 9 | செஞ்சேரி | ஆலம்பாடி | |
| 10 | எறையூர் | கல்பாடி | |
| 11 | கவுள்பாயைம் | கவுள்பாயைம் | |

| | | | |
|---|---|---|---|
| 12 | வெங்கலம் | வெங்கலம் | வேப்பந்தட்டை |
| 13 | எறையூர் | எறையூர் | |
| 14 | பசும்பலூர் | பசும்பலூர் | |
| 15 | பாண்டகப்பாடி | பாண்டகப்பாடி | |
| 16 | நெய்குப்பை | நெய்குப்பை | |
| 17 | வெண்பாவூர் | வெண்பாவூர் | |
| 18 | கை.களத்தூர் | கை.களத்தூர் | |
| 19 | முகமதுபட்டிணம் | அன்னமங்கலம் | |
| 20 | பாடாலூர் (கிழக்கு) | பாடாலூர் (கிழக்கு) | ஆலத்தூர் |
| 21 | நாரணமங்கலம் | நாரணமங்கலம் | |
| 22 | நாட்டார்மங்கலம் | நாட்டார்மங்கலம் | |
| 23 | காரை | காரை | |
| 24 | தெரணி | தெரணி | |
| 25 | செட்டிக்குளம் | செட்டிக்குளம் | |
| 26 | வரகுபாடி | வரகுபாடி | |
| 27 | கூத்தனூர் | கூத்தனூர் | |
| 28 | சிறுகன்பூர் | சிறுகன்பூர் | |
| 29 | கொளக்காநத்தம் | கொளக்காநத்தம் | |
| 30 | திருவளக்குறிச்சி | பாடாலூர் | |
| 31 | இரூர் | இரூர் | |
| 32 | கீழப்புலியூர் | கீழப்புலியூர் | குன்னம் |
| 33 | சித்தளி | சித்தளி | |
| 34 | பேரளி(தெற்கு) | பேரளி(தெற்கு) | |
| 35 | வயலப்படி | வயலப்படி | |
| 36 | ஒலைப்பாடி(மேற்கு) | ஒலைப்பாடி | |
| 37 | பரவை | பரவை | |
| 38 | அசூர் | அசூர் | |
| 39 | ஒதியம்(மேற்கு) | ஒதியம் | |

பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2024-வரை ரூ.4,91,35,997/- (ரூபாய் நான்கு கோடியே தொன்னூற்றொரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்தி தொள்ளாயிரத்தி தொன்னூற்றி ஏழு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2018-2019-ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக பத்து திட்டங்களுக்கு ரூ.1,01,68,350/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது..

2019-2020-ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக இரண்டு திட்டங்களுக்கு ரூ.41,93,360/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2020-2021-ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக பதினொன்று திட்டங்களுக்கு ரூ.2,92,13,296/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2021-2022-ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக மூன்று திட்டங்களுக்கு ரூ.33,05,000/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக மூன்று திட்டங்களுக்கு ரூ.3,31,118/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக இரண்டு திட்டங்களுக்கு ரூ.56,04,025/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **திட்டப்பணிக்கு பரிந்துரைக்கப்பட்ட அலுவலர்கள் விவரம்** | **பணிகள் விவரம்** | **மதிப்பீட்டு தொகை ரூபாய்** | **உயர் முன்னுரிமையா / பிறமுன்னுரிமைத் திட்டமா** |
|---|---|---|---|---|
| 1 | இணை இயக்குநர், நலப்பணிகள், பெரம்பலூர். | பெரம்பலூர் மாவட்டத்தில் சுகாதார துறை அலுவலகத்திற்கு தளவாடப்பொருள்கள் கொள்முதல் செய்தல். | ரூ.7,04,025/- | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 2 | செயற்பொறியாளர்,நீவது, மருதையாறு வழநிலக்கோட்டம், அரியலூர். | பெரம்பலூர் மாவட்டம் மற்றும் வட்டம், துறைமங்கலம் பெரிய ஏரி வலது பக்கத்தில் முன்கரை மேம்பாடு மற்றும் பலப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணி. | ரூ.49,00,000/- | உயர்முன்னுரிமைத் திட்டம் |

எனவே, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 31.3.2024-வரை, பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு ரூ.5,28,15,149/- மற்றும் வங்கி பராமரிப்பு கட்டணம், பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்

கட்டளைக்காக I-PAD வாங்கியது, கனிம அறக்கட்டளையின் மாத நிதியிலிருந்து 1% நிதி மாநில கனிம அறக்கட்டளைக்கு பரிமாற்றம் செய்தது வாயிலாக ரூ.1,73,134/- ஆக மொத்தம் ரூ. 5,29,88,283/- செலவழிக்கப்பட்டு மீதம் இருப்பு தொகையாக ரூ.3,84,93,641/- (ரூபாய் மூன்று கோடியே எண்பத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி மூன்று ஆறாயிரத்தி அறுநூற்றி நாற்பத்தி ஒன்று மட்டும்) 2023-2024-ம் நிதியாண்டில் அறக்கட்டளை வங்கிக்கணக்கில் உள்ளது.

மேலும் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு 2023-24-ஆம் நிதியாண்டிற்கான கணக்குகள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வறிக்கையானது பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / கனிம கட்டமைப்பு அறக்கட்டளை தலைவர் மற்றும் நிர்வாகக் குழு / மேலாண்மைக் குழு முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

தலைவர்,
பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும் மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்.